**செய்தி வெளியீடு எண் : 1111** **நாள் : 01.08.2024**

## செய்தி வெளியீடு

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிறுவனமாக தொடங்கப்பட்டு வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956–ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இந்திய குடிபெயர்வோர் சட்டம் 1983–ன் கீழ் ஆட்சேர்ப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு வெளிநாட்டு வேலைகளில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உரிமம் பெற்றுள்ளது.

இந்நிறுவனத்தின் வலைதளம் www.omcmanpower.com என்ற தனியார் Domain–ல் இருந்து தமிழக அரசின் www.omcmanpower.tn.gov.in என்ற களத்தில் (Domain) மாற்றப்பட்டுள்ளது. எனவே வெளிநாடு செல்ல விருப்பமுள்ளவர்கள் www.omcmanpower.tn.gov.in என்ற வலைதளத்தில் பதிவுசெய்து பயனடையுமாறு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தலைவர் (ம) நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu